**STARTING TIME 11.28 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Gr. II Bench Clerk of this court, on 16.12.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **தனலட்சுமி** Husband Name :

Address :

Calling : Age :

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**27. என் திருமணத்திற்கு எனது அக்காவான 2ம் பிரதிவாதிதான் செலவு செய்தார் என்றால், சரியல்ல, எந்த வரதட்சணையும் இல்லாமல் எனது அத்தை மகன்தான் என்னை திருமணம் செய்து கொண்டார். 2ம் பிரதிவாதி முன்னிலையில் தான் எனக்கு திருமணம் நடந்தது என்றால், சரியல்ல. எனது மாமா, அவரது தங்கையான எனது அம்மா பெயரில் எழுதி வைத்த சொத்தை, 2ம் பிரதிவாதி, எனக்கு திருமணம்செய்து வைத்ததால், எனது அம்மா அந்த சொத்தை 2ம் பிரதிவாதி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால், எனது எழுதி வைத்த விவரம் எதுவும் எனக்கு தெரியாது. தாவாவில் உள்ள பி–அட்டவணை சொத்தை பற்றிதான் எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்றால் ஆமாம். எனது தாயார் தாவா பி அட்டவணை சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லும்**

என்றால், சரியல்ல.

28. தாவா சொத்துக்களின் விலை ஏற்கனவே இருந்ததை விட தற்போது அதிகமாகிவிட்டது என்ற காரணத்தினால், தாவா சொத்தில் நான் பாகம் கேட்டு தற்போது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

29. எனது மாமாவான 4ம் பிரதிவாதி பெருமாள் 2ம் பிரதிவாதியிடமிருந்து 02.09.2015 அன்று ஒரு கிரையம் பெற்றுள்ளார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. எனது அக்கா கணவர் தான் அனைத்திற்கும் காரணம் என்று சொல்லி உள்ளது வழக்கிற்காக சொல்லியுள்ள பொய் என்றால், சரியல்ல.

30. முருக்கம் பட்டு கிராமத்தில் எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்தை எனது சித்தப்பாவிற்கு கொடுத்துவிட்டதாக சொல்வதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனவே, நான் சொல்வது போல் முருக்கம்பட்டில் உள்ள சொத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததால், தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

31. 30.05.2003ல் எனக்கும் எனது அம்மா, அக்கா மற்றும் அண்ணன் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின் பேரில் எனக்கு ரூ.50000/- ரொக்கமாக கொடுத்துவிட்டதால், தாவா சொத்துக்களில் எனக்கு எந்த பாகமும் இல்லை என்றும் எனவே, தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல. குடும்ப ஏற்பாட்டின்போது எழுதப்பட்ட ஆவணத்தில் தாவா சொத்துக்களில் எனக்கும் எந்த உரிமையும் இல்லை என எழுதி கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

3, 5, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதியின் பதிலுரையை ஏற்றுக்கொண்டு குறிப்பாணை தாக்கல் செய்துள்ளதால், 3, 5, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

ENDING TIME 11.43.A.M.

G YUVARAJ

Special Sub Judge, Arakkonam
Digitally signed by G YUVARAJ
Date: 2024.12.16 14:56:55 +0530